11.2.2021
அசல் வழக்கு எண்:275-2017

வா.சா.2 ரெகுநாதன் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கப்பலூரில் உள்ள சிப்கோவில் வேலை பார்த்து வருகிறேன். வாதியை எனக்கு 40 வருடங்களாக தெரியும். வாதியின் தாத்தாவிற்கு சொத்து ஒதுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. வாதி வீட்டின் பிளாட் எண்.541. இடப்பிரச்சினை சம்மந்தமாக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியின் தாத்தாவிற்கு பிளாட் எண்.541யை தவிர வேறு சொத்து எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற அமீன் தாவா சொத்தினை அளவீடு செய்ய வந்த விபரம் எனக்கு தெரியும். நீதிமன்ற உத்தரவை காண்பித்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவா வழக்கு பற்றிய விபரங்களை வாதி எனக்கு சொல்லவில்லை. வழக்கு பற்றிய முழு விபரமும் எனக்கு தெரியாது. வாதியின் தாத்தாவிற்கு பிளாட் எண்.541 மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் அதற்கு தெற்கே உள்ள இடம் பிரதிவாதி நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் கிழக்குபுறமும் காலி இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலியிடம் பிரதிவாதி நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிக்கு உடந்தையாக தாவா சொத்தினை அபகரிக்க பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. 5.12.2017ம் தேதி தாவா சொத்திற்கு கோவிந்தராஜன் வந்து பிரச்சினை செய்தது சம்மந்தமாக வாதியோ, அவரை சேர்ந்தவர்களோ காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, வாதி சட்டவிரோதமாக பிரதிவாதி நிறுவனத்திற்கு சொந்தமான சொத்தினை ஆக்கிரமித்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.